**Starting time 11.46 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 274/2015**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 07.02.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : நடராஜன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: தாவா சொத்து கந்தப்பக் கவுண்டருடைய மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால், அது கந்தப்பக் கவுண்டரின் மூதாதையர் சொத்து அல்ல, எனது அப்பா, அம்மா சம்பாதித்த சொத்து ஆகும். தாவா சொத்து எனது அப்பா, அம்மா சம்பாதித்த சொத்து என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை. அதுபோல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும் போது நான் இளவராகத்தான் இருந்தேன்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு குறைவாகவும், எனது அப்பாவிற்கு அதிகமாகவும் பாகம் பிரிக்கப்பட்டது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமான 14.10.1970 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் கூட்டு குடும்ப சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்தில் பிரதிவாதிகளுக்கும் பங்கு உண்டு என்றும், அதனை மறைத்து மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. எனது நிரூபண

வாக்குமூலத்தில் பத்தி 3-ல் சொல்லியுள்ள வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தை ரத்து செய்யுமாறு நான் ஊர் பஞ்சாயத்தாரர்களை அழைத்து சென்று பிரதிவாதிகளுடைய தகப்பனரான ராமசாமியிடமும், ராஜம்மாள் இடமும் கேட்டேனா என்றால், கேட்டேன். வா.சா.ஆ.3 ஆவணமான 13.03.1984 தேதியிட்ட கிரயப்பத்திரம் என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படும் போது 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளான ஜெயலட்சுமி மற்றும் செல்வராஜ் இளவர்களாக இருந்தார்கள் என்றும், அதனை மறைத்து மேற்படி ஆவணம் எழுதப்பட்டது என்று சொன்னால், சரியல்ல.

4. அசல் வழக்கு எண் 1076/71 என்ற வழக்கு பிரதிவாதிகளுடைய தாயார் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 50 செண்ட் நிலம் அவருக்கு ஒதுக்கப்பட்டு, சுவாதீனமும் கொடுக்கப்பட்டது என்றால், மேற்படி வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அசல் வழக்கு எண் 154/14 வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பெற்று அதன் மீது E.P.No.62/15-ல் சுவாதீனத்திற்கான தீர்ப்பாணை கிடைக்கப் பெற்று மேற்படி சுவாதீனம் எடுக்கப் போகும்போது அதை நான் தடுத்தேனா என்றால், சரிதான். மேற்படி இந்த வழக்கானது எந்த முகாந்திரமும் இல்லாமல் என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டப்படி மூதாதையரின் சொத்தில் பேரன்களுக்கு உரிமை உண்டு, ஆனால் அதனை மறைத்து நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பெற எனக்கு முகாந்திரம் இல்லை என்பதால், இந்த வழக்கை செலவுத் தொகையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.05 P.M.

**ஒப்பம்/-அ.நர்மதாராணி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**